**வகுப்பு : 6-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

## இயல் – 7
## கவிதைப்பேழை
## பாரதம் அன்றைய நாற்றங்கால்

**I. மனப்பாடப்பகுதி**

புல்வெளி யெல்லாம் பூக்கா டாக்கிப்
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவியமாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்!

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள் பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

– **தாராபாரதி**

**II. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நாடு இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகிறது. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய் உணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன.

**வினாக்கள்:**

1. **பூமியின் கிழக்கு வாசல் எது?**
2. **இந்திய நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குவது?**
3. **இந்திய நாட்டின் மேலாடை எது?**
4. **காளிதாசர் இயற்றிய பாடல் எவ்வாறு எது வரை எதிரொலிக்கின்றது?**
5. **கங்கை ஆற்றின் அலைகள் எதற்கு இசையமைக்கின்றன?**

**விடைகள்:**

1. பூமியின் கிழக்கு வசாலாகத் திகழும் நமது இந்தியநாடு.
2. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகிறது.
3. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது.
4. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன.
5. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையாமைக்கின்றன.

**III. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தளுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரதநாடு திகழ்கின்றது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்று கோலாக காந்தியடிகள் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகிறது.

**வினாக்கள்:**

1. **கன்னியின் கூந்தலுக்கு கொடுக்கப்படுவது எது?**
2. **நன்மை செய்வது எது?**
3. **காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றனவை எது?**
4. **அள்ள அள்ளக் குறையாதது எது?**
5. **நம் நாடு எவ்வாறு விளங்குகின்றன?**

**விடைகள்:**

1. குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன.
2. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.
3. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.

4. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கின்றது.
5. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்று கோலாக காந்தியடிகள் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகிறது.

**IV. குறுவினா:**

1. **தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

   தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்கள்
   - காளிதாசர்,
   - கம்பர்.
   - திருவள்ளுவர்

2. **இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.**
   - குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன

   - இந்தியாவின் மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

## உரைநடை உலகம்
## தமிழ்நாட்டில் காந்தி

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

காந்தியடிகளுக்குத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ மக்கள் மீதும் மிகுந்த அன்பு உண்டு. அவர் பலமுறை தமிழ்நாட்டில் பயணம் செய்துள்ளார். அப்போது சுவையான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார். அப்போது ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனை எதிர்த்துப் பெரிய போராட்டத்தை

நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். அதைப் பற்றிய கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது. காந்தியடிகள் ஒரு மெத்தையில் அமர்ந்து இருந்தார். அவருக்கு அருகில் இராஜாஜியும் மற்ற தலைவர்களுக்கும் நின்றுகொண்டு இருந்தனர்.

**வினாக்கள்:**

1. **காந்தியடிகள் எவற்றில் மீது அன்பு கொண்டு இருந்தார்?**
2. **காந்தியடிகள் எப்போது சென்னைக்கு வந்தார்?**
3. **ஆங்கில அரசு நடைமுறைப்படுத்திய திட்டம் எது?**
4. **கருத்தாய்வுக் கூட்டம் எங்கு நடைபெற்றது?**
5. **ஆங்கில அரசு எதிர்த்துப் பெரிய போராட்டம் நடந்த இடம் எது?**

**விடைகள்:**

1. காந்தியடிகளுக்குத் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.
2. 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார்.
3. ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது.
4. கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது.
5. பெரிய போராட்டத்தை நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். அதைப் பற்றிய கருத்தாய்வுக் கூட்டம் இராஜாஜியின் வீட்டில் நடைபெற்றது.

**II. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார். அப்போது காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள். தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார். அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார். அவரது தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்த கோலத்திலேயே தம் வாழ்நாள் முழுவதும் இருந்தார். உலகம் போற்றிய எளிமைத் திருக்கோலம் இதுவாகும்.

**III. குறுவினா**

1. **காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?**

காந்தியடிகள் ஒருமுறை மதுரையில் தங்கி இருந்தார். மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று வரலாம் என்று தலைவர்கள் அவரை அழைத்தனர். "அந்தக் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி உண்டா? என்று காந்தியடிகள் கேட்டார். அங்கு இருந்தவர்கள் "இல்லை என்றனர். "அப்படியானால் அங்கே வரமாட்டேன் என்று கூறிவிட்டார்.

2. **காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வை கூறுக?**

**1937** ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. ஆம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது என்று கூறினார் காந்தியடிகள்.

**IV. சிறுவினா**

1. **காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.**

1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார்.

பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள். தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார். அன்றுமுதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார்.

**2. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.**

காந்தியடிகள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாகக் கூறியுள்ளார். ஜி.யு. போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பட்டு உள்ளார். திருக்குறள் அவரைத் கவர்ந்த நூலாகும்

1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

## விரிவானம் (துணைப்பாடம்)
## வேலுநாச்சியார்

**I. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வை சுருக்கமாக எழுதுக.**

**முன்னுரை:**

இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார். தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார். சிலம்பம், குதிரைஎற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார். சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.

**சிவகங்கையை மீட்டல்.**

வேலுநாச்சியாரின் கணவர் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் ஆவார். அவர் ஆங்கிலப்படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் அங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதிக்கொண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி, ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார். அவருக்கு உதவியாக அமைச்சர் தாண்டவராயனும், தளபதிகள் பெரிய மருதுவும் சின்ன

மருதுவும் இருந்தனர். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு மைசூர் அரசர் ஐதர் அலி ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களை உதவிக்கு அனுப்பினார்.

பெண்கள் படைப்பிரிவுக்கு குயிலியும், ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் தலைமை ஏற்றனர். விஜயதசமிக்கு முதல் நாள் சிவகங்கையை நோக்கிப் படை புறப்பட்டது. உடையாள் என்ற பெண் வேலு நாச்சியாரைக் காட்டிக் கொடுக்காமல் உயிரை விடுகிறாள் இதை அறிந்ததும் அவளுக்கு நடுகல் வைத்தனர். குயிலியின் உயிர் தியாகத்தினால் ஆங்கிலப்படை போரில் தோல்வியடைந்து கோட்டையை விட்டு ஓடியது. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்டு அரசியானார்.

**முடிவுரை.**

ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலு நாச்சியார். அவரின் வீரம் மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர் அலியின் உதவி ஆகிவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

## கற்கண்டு (இலக்கணம்)
## நால்வகைச் சொற்கள்

**I. குறுவினா**

1. **சொல் என்றால் என்ன?**
   தமிழில் சில எழுத்துக்கள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும். இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.
2. **சொற்களின் வகைகளை எழுதுக.**
   இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.
3. **பெயரையும் வினையையும் சார்ந்து வரும்சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?**
   பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து இயங்காது.

**II. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ. சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள் நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் “சுதேசி நாவாய் சங்கம்” என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ. உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

**வினாக்கள்:**

1. **சுதேசி நாவாய் சங்கத்தை நிறுவியவர் யார்?**
2. **வ. உ. சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்**
3. **வ. உ. சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?**
4. **வ. உ. சி. அவர்களின் பன்முகத்தன்மைகள் யாவை?**
5. **வ. உ. சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?**

**விடைகள்:**

1. 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் “சுதேசி நாவாய் சங்கம்” என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
2. வ. உ. சி. சென்னைக்குச் செல்லும்போது பாதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
3. வ. உ. சி. அவர்கள் பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.
4. வ. உ. சி. அவர்கள் வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர். தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார்.
5. வ. உ. சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார்.

Next Generation School